1972 மார்ச் 1]

தமிழ் அறிஞர் ஒருவருக்கு வழங்கப்படவேண்டுமென்று அரசு வற்புறுத்துமா? மேலும், அங்கேயுள்ள தமிழ் அறிஞர்கள், டாக்டர் கலைஞர் அவர்கள் அண்மையில் குறிப்பிட்டதுபோல், ஆராய்ந்த வற்றையே மேலும், மேலும் ஆராய்ந்து கொண்டிராமல், புதிய சிந்தனைகளை உணர்த்தும் வகையில் ஆராய்ச்சி நடத்தும்படி அந்த நிலையத்திற்கு யோசனை கூற அரசு முற்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இண்டர்நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டமில் ஸ்டடீஸ், உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளில் கற்பிக்கும் லிங்குவிஸ்டிக்ஸை அனைத்தையும் இணைக்கும் நிலையமாக அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், உலகத்திலுள்ள மொழியியல் ஆராய்ச்சியாளர்களும், உலகத்திலுள்ள மொழிகளோடு தொடர்புடையவர்கள் பலரையும் வைத்துக்கொண்டு மொழிகளின் மேம்பாட்டை ஆராய்ச்சி செய்வதற்கான அடிப்படையில் அது அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் தமிழ் மொழி மேலும் வளம் பெறுவதற்கும், வளப்படுத்துவதற்கும், தமிழ் மொழியின் சிறப்பை உலகுக்கு பயன்படுத்துகிற வகையில் அமைப்பதற்கும் ஆராய்ச்சிகள் நடத்த, பல்வேறு வகைப்பட்ட பிரிவாக பிரிக்கப்பட்டிருக்கிறது. இப்போது அந்த வேலை தொடங்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டிலிருந்து ஓரிரு துறைகளில் அதனுடைய பணிகள் தொடங்கும்.

தற்காலிகமாக, மதுரைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் அதனுடைய கௌரவ இயக்குநராக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பொறுப்பில் வேறு பல தமிழ்மொழி ஆராய்ச்சியாளர்களும், தமிழ் நன்கு அறிந்தவர்களும், உலகப்புகழ் பெற்றவர்களும் இடம்பெறுவார்கள். அவர்களுடைய தலைமையின் கீழ் அந்த நிலையம் சிறப்பாக பணியாற்றும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

மாட்டின வளர்ச்சி

* 264 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் மாட்டின வளர்ச்சிக்குப் பயன்படுத்தும் ஆஸ்திரேலிய ஜெர்சி காளைகளை மற்ற மாவட்டங்களுக்கும்

இறக்குமதி செய்து வழங்க திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அத்தகைய திட்டமொன்று பரிசிலனையில் உள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, ஜெர்சி இனக் காளைகளை செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்வது மற்ற மாநிலங்களில் நல்ல பலன் கிட்டியிருப்பதால் நம்முடைய மாநிலத்திலும் எந்தெந்த இடங்களில் இவ்வித செயற்கை கருத்தரிக்கச் செய்யும் முறை அமுல்படுத்தப்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம் நல்ல பால் வளம் பெருகியிருக்கிற சூழ்நிலையைப் பார்க்கிறபோது, பால் புரட்சி உருவாக்கவேண்டுமென்று சொல்கிற அமைச்சரவர்கள் எல்லா மாவட்டங்களிலும் இந்த செயற்கை கருத்தரிக்கும் முறையை அமுல்படுத்த முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்திலும், மதுரை மாவட்டத்தின் ஒரு பகுதியிலும், ஏற்கெனவே இந்த செயற்கை முறை மூலமாக கரு ஏற்படுத்து வதற்கு இத்தகைய காளைகள் பயன்படுத்தப்படுகின்றன. அதே முறையில் எல்லாப் பகுதிகளிலும் விரிவாக இந்த ஜெர்சி இனக் காளைகளைப் பயன்படுத்திக்கொள்வதற்கு 200-250 காலைகளை ரூ. 60 லட்சம் செலவில் வெளிநாட்டிலிருந்து வரவழைக்கப்படுவதற்கு மத்திய அரசாங்கத்திடம் அனுமதி கேட்க ஆலோசிக்கப் பட்டு வருகிறது. அனுமதி கிடைத்து, அவைகள் வந்து சேர்ந்தவுடன், அவை பல்வேறு மாவட்டங்களுக்கும் பரவலாக விநியோகிக்கப் படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த ப்ரீசியன் புல்ஸ் வெளிநாட்டிலிருந்து வரவழைப்பதற்கு அரசிடம் திட்டமிருக்கிறதா? அதை உடனடியாக வரவழைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, நம்முடைய நாட்டிற்கு அதிகமாக பொருந்தி வருவது ஜெர்சி தான். அதற்கு அடுத்த நிலையில் உள்ளது. இந்த ப்ரீசியன் புல்ஸ். அந்தக் காளைகள் 27 தேவை என்று மத்திய அரசுக்கு தெரிவிக்கப்பட்டிருக் கிறது. அவர்கள் அதை வரவழைப்பதற்கு வெளிநாட்டுச் செலா வணியை ஏற்றுக்கொண்டு வரவழைத்துக் கொடுப்பார்களானல் நாம் அதை நல்லமுறையில் பயன்படுத்தலாம்.